**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 76 /2015**

**Deposition of Witness for : PW 5**

**Name** **:** திரு. எம். ஆர். ராதா
**Father Name** **:**
**Village** **:**
**Taluk** **:**
**Caste** **:**
**Calling** **:**
**Religion** **:**
**Age** **:**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09-06-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது நீப்பத்துறை கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 2013ம் ஆண்டில் நான் நீப்பத்துறை கிராமத்தில் உள்ள வெங்கட்ராம கோயில் தேவஸ்தானம் வெளியே பூஜை சாமான் மற்றும் பொறி கடை வைத்து வியாபாரம் செய்து வந்தேன். இறந்து போன சக்திவேலை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் விசாரணையில் ஸ்ரீ வெங்கட்ராம கோயில் தேவஸ்தான கடையில் அ.சா. 2, பானுமதி ஒரு கடையை வாடகைக்கு எடுத்து பூஜை சாமான்களை விற்று வந்தார் என்றும், அதில் இறந்து போன சக்திவேல் தனது தாயார் அ.சா.2 நடத்தி வந்த கடையில் உதவி செய்து வந்தார் என்றும், ஆடி மாதம் திருவிழா நேரத்தில் ஏழுமலை என்பவர் குத்தகை எடுத்து சக்திவேல் என்பவரை வைத்து சுங்கம் வசூல் செய்து வந்தார் என்றும். எதிரி சக்திவேலிடம் சுங்கம் வசூல் செய்த பணத்தை தருமாறு கேட்டதற்கு சக்திவேல் தான் சுங்கம்எதுவும் வசூலிக்கவில்லை என்று கூறினார் என்றும், பானுமதி கடையில் சக்திவேல் படுத்துக் கொண்டு இருந்தார் என்றும், முதல் நாள் இரவு 9 மணிக்கு சக்திவேலை ஆஜர் எதிரி கல்லால் அடித்ததாகவும், அதனால் ஆஜர் எதிரியை சக்திவேல் துரத்தி சென்றதாகவும், பின்னர் இரவு 10.30 மணிக்கு பானுமதி கடையில் சக்திவேல் படுத்து இருந்தார் என்றும், ஆஜர் எதிரி இரண்டு செங்கலால் அவருடைய உயிர் நாடியில் அடித்ததாகவும், 108 ஆம்புலன்ஸ் மூலம் தீர்த்தமலை அரசு மருத்துவமனைக்கு சென்று வந்ததாகவும், ஆஜர் எதிரி தாக்கியதால் தான் தனக்கு சிறுநீர் கழிக்கும் போது ரத்தம் வருவதாக கூறினார் என்றும், பின்னர் பானுமதி சக்திவேலை மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும்

அங்கு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார் என்றும், சுங்கம் வசூல் செய்வது சம்மந்தமாக ஆஜர் எதிரிக்கும், சக்திவேலுக்கும் முன் விரோதம் இருந்ததால் ஆஜர் எதிரி சக்திவேலின் உயர் நாடியில் அடித்ததால் தான் அவர் இறந்து விட்டார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

ஒம்/- எம்.ஆர்.ராதா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**<u>SESSIONS CASE NO. 76 /2015</u>**

**<u>Deposition of Witness for : PW 6</u>**

**Name** : திரு. சக்திவேல்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09-06-2022.**

<u>முதல் விசாரணை</u> -

நான் தற்போது நீப்பத்துறை கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 2013ம் ஆண்டில் நான் நீப்பத்துறை கிராமத்தில் உள்ள வெங்கட்ராம கோயில் தேவஸ்தானம் வெளியே பூஜை சாமான் மற்றும் பொறி கடை வைத்து வியாபாரம் செய்து வந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.2 பானுமதியை தெரியும். இறந்து போன சக்திவேலை தெரியும். சக்திவேல் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. நான் சம்பவ நேரத்தில் வெளியூரில் இருந்தேன். ஆனால் எதிரிக்கும், சக்திவேலுக்கும் தகராறு நடந்ததாக ஊர் மக்கள் கூறினார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

போலீசார் விசாரணையில் ஸ்ரீ வெங்கட்ராம கோயில் தேவஸ்தான கடையில் அ.சா. 2, பானுமதி ஒரு கடையை வாடகைக்கு எடுத்து பூஜை சாமான்களை விற்று வந்தார் என்றும், அதில் இறந்து போன சக்திவேல் தனது தாயார் அ.சா.2 நடத்தி வந்த கடையில் உதவி செய்து வந்தார் என்றும், 2013 ஆடி மாதம் திருவிழா நேரத்தில் ஏழுமலை என்பவர் குத்தகை எடுத்து சக்திவேல் என்பவரை வைத்து சுங்கம் வசூல் செய்து வந்தார் என்றும். எதிரி சக்திவேலிடம் சுங்கம் வசூல் செய்த பணத்தை தருமாறு கேட்டதற்கு சக்திவேல் தான் சுங்கம் எதுவும் வசூலிக்கவில்லை என்று கூறினார் என்றும், 30.08.2013 பானுமதி கடையில் சக்திவேல் படுத்துக் கொண்டு இருந்தார் என்றும், இரவு 9 மணிக்கு சக்திவேலை ஆஜர் எதிரி கல்லால் அடித்ததாகவும், அதனால் ஆஜர் எதிரியை சக்திவேல் துரத்தி சென்றதாகவும், பின்னர் இரவு 10.30 மணிக்கு பானுமதி கடையில் சக்திவேல் படுத்து இருந்தார் என்றும், ஆஜர் எதிரி இரண்டு செங்கலால் அவருடைய உயிர் நாடியில் அடித்ததாகவும், அதனால் பலத்த காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் தீர்த்தமலை அரசு மருத்துவமனைக்கு சென்று வந்ததாகவும்,

ஆஜர் எதிரி தாக்கியதால் தான் தனக்கு சிறுநீர் கழிக்கும் போது ரத்தம் வருவதாக கூறினார் என்றும், பின்னர் பானுமதி சக்திவேலை மேல்சிகிச்சைக்காக அரூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும் அங்கு சிகிச்சை பலனளிக்காதால் அவரை தருமபுரி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும் அங்கு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார் என்றும், சுங்கம் வசூல் செய்வது சம்மந்தமாக ஆஜர் எதிரிக்கும், சக்திவேலுக்கும் முன் விரோதம் இருந்ததால் ஆஜர் எதிரி சக்திவேலின் உயர் நாடியில் அடித்ததால் தான் அவர் இறந்து விட்டார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

ஒம்/- சக்திவேல்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.